# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **S.T.C. No. 379/2025** |
| Prosecution witness | : | P.W.1 |
| List of witness | : | L.W.1 |
| Name | : | மலர்விழி |
| Father's /Husband Name | : | ராஜசேகர் |
| Village | : | சீதக்கமங்களம் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 35 |
| Occupation | : | கூலிவேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 13th day of March 2026.
Accused present.

**முதல் விசாரணை தொடர்ச்சி...**

நான் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துமனையில் சிகிச்சையிலிருந்த போது போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். மேற்படி புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார்வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி எதிரி என்னை திட்டியதால் எனக்கு அசிங்கமாகவும் வருத்தமாகவும் இருந்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரி எனது அக்கா கணவர் என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணையில் உக்கடையில் வசித்துவருவதாக சொல்லும் வீடு ஆஜர் எதிரியின் வீடு என்றால் சரிதான். மேற்படி வீடு ஆஜர் எதிரியின் வருமானத்தை கொண்டு கட்டப்பட்டது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று ஆஜர் எதிரி அவரது வீட்டில் இருந்த டிவியை எடுக்க வரும்போது நான் எடுக்கக்கூடாது என்று பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. நான்தான் எதிரியை தடுக்கமுயன்றபோது அவரை பிடித்து இழுத்தபோது தடுமாறி கீழே விழுந்த காயத்தை எதிரி தாக்கியதாக பொய்யாக சொன்னேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியும் எனது அக்காவும் கருத்து வேறுபாடு கொண்டு பிரிந்து வாழ்வதால் நான் எதிரியை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இவ்வழக்கினை

பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாள் அன்று எனது அக்கா உஷாவும் உடன் இருந்தார் என்றார் சரிதான். மேற்படி சம்பவம் நடக்கவில்லை என்ற காரணத்தினால் தான் எனது அக்காவை சாட்சியாக போலீசார் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தை யாரும் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் செந்தில்குமார் கலியமூர்த்தி ஆகியோர் என்னை உடனே மருத்துவமனைக்கு அழைத்து சென்றிருப்பார் என்றாலும் எனது முதல் விசாரணையில் எனது அப்பா வந்து அழைத்து சென்றததாக வழக்கிற்காக மிகைப்படுத்தி சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி எனது அக்காவிற்கு எதிராக சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து வேண்டி வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். விவாகரத்து வேண்டி மனுதாக்கல் செய்ததால்தான் ஆஜர் எதிரி மீது பொய்யாக இவ்வழக்கினை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி எனது மீதும் எனது அக்கா மீதும் நன்னிலம் காவல் துணை கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் புகார் வாக்குமூலத்தில் எதிரி என்னை திட்டியதால் வருத்தமும் அசிங்கமும் ஏற்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக தற்போது மிகைப்படுத்தி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது குடும்ப பிரச்சனையை மனதில் வைத்துகொண்டு எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.13 13:02:18 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.

`